**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.66
https://ngmtamil.in/

# சோழ மன்னர்களின் நீர் மேலாண்மை

**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை, எஸ். ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திருவேற்காடு, சென்னை.

**முன்னுரை**

காலத்தின் வரலாறுகள் மனித நாகரிகத்தின் உளிகள் ஆகும். மனித நாகரிகத்தின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் இயற்கையோடு இயைந்ததாகவே இருந்து வருகின்றது. இயற்கை பேரிடராலே சிந்து நதிக்கரை நாகரிகங்கள் அழித்தன. பூம்புகார் லெமூரியா மற்றும் உறையூர் என இயற்கைப் பேரிடருக்கு ஆட்பட்ட நாகரிக நகரங்கள் ஏராளம். இயற்கையோடு இணைந்து செல்லும் மனித நாகரிகங்களே காலத்தைத் தாண்டி நிற்கின்றன. அந்த வகையில் எத்தனையோ இடர்களுக்கு உட்பட்டாலும் அதிலிருந்து மீண்டு தமிழகத்தின் தன்னிகரல்லா ஆட்சிமுறையைத் தந்த அரசு சோழப்பேரரசு எனலாம். அவர்களின் நீர் மேலாண்மையும் ,நிர்வாகச் சிறப்பும் இன்று வரை அழியாத சான்றாக செயல்பட்டு வருகின்றன. இவை குறித்த கருத்துக்களை வரலாற்று ஆய்வு அணுகுமுறையில் நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**வேளாண்மையும் நீர்வழி மேலாண்மையும்**:

சோழநாடு சோறுடைத்து என்ற பெருவாக்கிற்கு ஏற்ப தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக பொன்னி டெல்டா இன்று வரைத் திகழ்வதற்குக் காரணம் மன்னர்களின் நீர்வழிமேலாண்மையே காரணமாகும். ஆறுகளிலிருந்து மாற்றி அமைக்கப்பட்ட கிளை ஆறுகள் தோண்டப்பட்ட முதன்மைக் கால்வாய்கள், துணைக்கால் வாய்கள் , ஏரிகள்,குளங்கள் என நீரியல் வலைப்பின்னல் ஏற்படுத்திய சோழர்கள் வேளாண்மையில் உயர்வு பெற்று உணவு உற்பத்தியில் சிறந்துள்ளனர்.கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், ஈழமும் வென்றான் என்ற சிறப்புப் பெயர்களின் பின்னே சோழப்படை வீரர்களின் செயல் ஆற்றல் அடங்கி உள்ளது. இவ்வளவு தொலைதூரங்களுக்கும் படைவீரர்களுக்கு உணவு கொண்டு செல்லப்பட்டது. இது சோழர்களின் உணவு தன்னிறைவினையும் வேளாண் மேன்மையையும் காட்டும்.

**சிதம்பர ரகசியமும் ,நீர் மேலாண்மையும்**:

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அமைந்துள்ள நடராஜர் கோவில் சோழ மன்னர்களின் குலதெய்வ கோயிலாக விளங்கியதால் பல திருப்பணிகளை மன்னர்கள் செய்துள்ளனர். சிதம்பரம் கோவிலுக்கு பல சோழ மன்னர்கள் பொன் வேய்ந்துள்ளனர்,முதலாம் பராந்தகச் சோழன் என்பான் திருச்சிற்றம் பலமாகிய சிதம்பரத்திற்கு பொன் வேய்ந்ததை செப்பேடுகள் கூறுகின்றன'.

'திருச்சிற்றம்பலத்தான் பொன் வேய்ந்தான்' என ஆனை மங்கலச் செப்பேடுகளும், திருவாலங்காட்டுச்

செப்பேடுகளும்: உணர்த்துகின்றன. பொன் வேய்ந்து கடவுள் வழிபாடு செய்யப்படும் அடிப்படையான நீரினைப் பாதுகாத்து பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையிலும் கோயில்களைப் பயன்படுத்தியுள்ளனர். கீழிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் நீரியல் தொழில் நுட்பம்தான் சிதம்பர ரகசியம் என வரலாற்று ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்."

**பாம்பு போல நீர்வழிப்பாதை**:

சோழ மன்னர்கள் பாம்பு போல் நீர்வழிப் பாதை அமைத்து பனை உயரம் தண்ணீரை எடுத்துச் செல்லும் வித்தையை மன்னர்கள் நீர் மேலாண்மையியல் கட்டமைப்புக்களில் பயன்படுத்தி உள்ளனர். அகலமான இடத்திலிருந்து அதிகமான நீர் எடுத்துச் செல்லப்பட்டு குறுகலான இடத்தில் அழுத்தத்துடன் செலுத்தினால் நீர் கீழிலிருந்து
மேல் நோக்கிச் செல்லும் வகையில் சிதம்பரம் கோயிலில் உள்ள நிலவரை நீர்வழிப் கால்வாய் கட்டமைப்பு உள்ளது.

51 ஏக்கர் பரப்பளவில் சிதம்பரம் கோயிலில் விழும் மழைநீர் கோவிலினுள் தேங்காது வெளியேறும் வகையில் நிலவரைக் கால்வாயானது அமைக்கப் பட்டுள்ளது. கோவிலின் வடக்குப் பகுதியில் உள்ள யானைக்கால் மண்டபத்தின் அருகே தொடங்கும் இக்கால்வாய் திருப்பாற்கடல் மற்றும் தில்லை காளிக் கோயிலின் முன்பாக உள்ள சிவப்பிரியைக் குளத்தைச் சென்றடைகிறது. இக் கால்வாய் 2,200 மீட்டர் நீளமுடையது. 5செ.மீ அகலமும் 77 செ. மீ ஆழமும் கொண்டது.

இக்கால்வாயின் கட்டமைப்பிற்கு செங்கற்கள், களிமண் கண்ணாம்பு பயன்படுத்தியுள்ளனர். மேற்புறம் சில இடங்களில் நீன்வடிவ கருங்கல் மூடப்பட்டுள்ளது. இக்கருக்கல் இணைப்பு இடைப்பூட்டு கட்டமைப்பு (வே நா ட ழஉ மா யெ எ ல ள வ ந அ) முறையில் வடிவமைத்துள்ளனன; கால்வாயின் உட்புறம் இன்றுவரை சுத்தமாகவும் செயல்பாட்டிற்குரியதாகவும் உள்ளது. சிதம்பரம் கோயிலைச் சுற்றி ஒன்பது நீர்பிடிப்புக் குளங்களையும் சோழர்கள் ஏற்படுத்தியுள்ளனர். இதனால் மழைநீர் விணடிக்கப்படாமல் கால்வாய் வழியே சென்று குளங்களில் தேக்கி வைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு உரியதாக்கப்பட்டுள்ளது.

**வீரநாராயண பேரேரி:**

புதுக்கோட்டையில் மட்டும் 5,125 ஏரி குளங்களை சோழ மன்னர்கள் ஏற்படுத்தி உள்ளனர். இதனால் அப்பகுதி உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதாக உள்ளது. வீராணம் ஏரி என்றழைக்கப்படும் வீரநாராயணப் பேரேரி 1100 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்டு ஒரு டிஎம்சி தண்ணீரை சேர்த்து வைக்குமளவிற்கு சிறப்புற இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ் ஏரியிலும் புதுவகை நீரியல் கோட்பாட்டை சோழர்கள் கையாண்டுள்ளனர். தெற்கிலிருந்து வடக்காக தண்ணீர் கொண்டு செல்லும் எதிர்மறையான நீரியல் விதியினைப் பயன்படுத்தி கொள்ளிடம் ஆற்றிலிருந்து தோண்டப்பட்ட வடவாற்றின் மூலம் இந்த ஏரி நிரம்பும் வகையில் வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்குநோக்கிப் பாயும் வகையில் வெட்டப்பட்டதால் இவ்வாறு வடவாறு என பெயர் பெற்றது.

களப்பிரரை முறியடித்து கி.பி 375ல் கடுவகோளால் ஏற்படுத்தப்பட்ட பாண்டிய அரசு கி.பி 915ல் பராந்தகச் சோழனால் அழிவுற்றது சோழர்களின் பொற்கால ஆட்சியைத் தமிழகத்தில் நிறுவுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் முதலாம் பராந்தகச் சோழன் ஆவார். இவர் இயற்பெயர் 'வீர நாராயணன் என்ற பெயரைக் கொண்டு வெட்டப்பட்டதே இன்றைய வீராணம் ஏரியாகும் வீர நாராயணப் பேரேரி' என்பதே சுருங்கி 'வீராணம் ஏரி 'யாயிற்று எனலாம்.

இன்று தமிழ்நாட்டின் தலைநகருக்கு குடிநீர் வழங்கும் ஏரியாக உள்ளது. இந்த ஏரியால் 45,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. தக்கோலப் போரினை எதிர்பார்த்த நிலையில் பராந்தகச் சோழன் போர் வீரர்களைக் கொண்டு இடைப்பட்ட காலத்தில் வெட்டிய ஏரியே வீர நாராயணப்பேரேரி ஆகும். இதிலிருந்து போருக்கு காத்திருக்கும் நேரத்தைக் கூட மக்களுக்கு பயனுள்ள வகையில் பாசன வசதி பெறும் நோக்கில் பயன்படுத்தியுள்ளார் என்பது தெரியவருகிறது. இத்தகையச் செயல்பாடுகளே பராந்தகச் சோழனை ஆற்றல் மிக்க அரசராக இன்று வரைக் காட்டுகிறது. இச் சோழனின் நேர மேலாண்மையும் இதன் வழி புலனாகும்.

சோழ மன்னர்கள் நீரினை பாதுகாத்து பயன்படுத்தியதற்கு இயற்கை பேரிடர்களால் ஏற்பட்டப் பாதிப்புகளும் ஒரு காரணமாக அமைகிறதெனலாம். இதனால் எதிர்மறையான செயல்பாடுகளைக் கூட நேர்மறையாக தங்களின் வளர்ச்சிக்குரிய வகையில் பயன்படுத்தி சோழ மன்னர்களின் அறிவுக்கூர்மை புலனாகிறது.

**சோழ நாட்டுப் பெருவெள்ளப் பாதிப்புக்கள்**

பண்டைய சோழ மன்னர்களின் தலைநகரான உறையூர் காவிரி வெள்ளத்தால் கி.பி 10ஆம் நூற்றாண்டில் அழிந்தது. குழிகளில் ஒருபானை மணலும் களிமண்ணும் அடுத்தடுத்து காணப்பட்டன. அவற்றின் இடையே சிறிதும் பெரிதுமான பெருங்கற்கள் புதைந்து இருந்ததை உறையூர் அகழ்வாராய்ச்சி மூலம் அறியமுடிகிறது. இதனால் வெள்ளப்பெருக்கு அழிவிலிருந்து தங்களைப் பாதுகாக்க மக்கள் முயற்சி மேற்கொண்டனர்.

‘ஊரின் வடகிழக்கின் னிலம் அல்லூர்

காவிரி பெருகிக் குலை

உடைத்து மணலிட்டுப் புன் செய்யாக்கிடக்க

ஆறேழாட்டைக் காலபயிர் ஏறாதே பாழ் கிடக்க’

**South Indian Inscription volo, No0689** **என்ற** கல்வெட்டினால்தான் முதலாம் பராந்தகச் சோழனின் 37வது ஆட்சியாண்டில் வெள்ளம் ஏற்பட்டதை அறியமுடிகிறது. விக்கிரமச் சோழன் 6 ஆம் ஆட்சியாண்டில் வெள்ளம் ஏற்பட்டு ஊர் அழித்ததை திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் கல்வெட்டு கூறுகிறது.

“இவ்வூர் யாண்டு 6வது

பெருவெள்ளம் கொண்டு ஊரும் போகமும்

அழிந்து அதர்த்தப்பட்டு இவ்வூரிறை இறுக்கைக்கு உடலில்லாமையால் நீர் நிலம் விற்றுக் கொடுத்தோம்'”

இதனால் தான் சோழர்கள் நீரின் இயல்பையே மாற்றி மக்களைப் பாதுகாத்துள்ளனர். கிழக்கிலிருந்து மேற்கே என்பதற்குப் பதில் மேற்கிலிருந்து கிழக்காகவும்; வடக்கிலிருந்து தெற்கு என்பதற்குப் பதில் தெற்கிலிருந்து வடக்கு எனவும் நீரியல் விதிக்கு மாறாகச் செயல்பட்டு நீரினை ஆக்கப்பூர்வமான முறையில் சோழ மன்னர்கள் பயன்படுத்தி உள்ளனர். இதனால் தான் 'அகண்ட காவேரி' நெற்களஞ்சியத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது. அதனாலே சோழநாடு சோறுடைத்து என்ற பெருமையை இன்று வரைத் தக்கவைத்துள்ளது.

**நீர் நிலைகள் பாதுகாப்பு**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நீர் நிலைகள் பாதுகாப்பிற்காக தனிவாரியத்தையே சோழ மன்னர்கள் அமைத்து இருந்தனர். இவைகள் 'ஏரி வாரியம்' என அழைக்கப்பட்டன. இச்சொல்லாடல் இன்றைய குடிநீர் வாரியத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது. நீர்வரத்து இல்லாத சமயங்களில் நீர்நிலைகள் புணரமைக்கப்பட்டுள்ளன. அவ்வேரிகளில் தேங்கியுள்ள வண்டலை எடுத்து விற்றுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

நீர் கிடைக்காத காலங்களில் ஆற்றுக்கு குறுக்கே அணைகள் கட்டி ஊற்று நீரைத் தேக்கி விவசாயம் செய்வதற்கு உதவும்

ஊழியத்தை குலை குரம்பு செய்நீர் என்று குறிப்பிட்டுள்ளனர் 'வெள்ளான் வெட்டி என்பது வெள்ளான பணிகளுக்குச் செய்யும் ஊழியத்தைக் குறித்தது. அதாவது, நீரோடும் கால்வாய்களைச் சீரமைத்தல் குளக்கரைகளை வெட்டி கெட்டிப்படுத்துதல் போன்ற பணிகள் இதிலடங்கும். வெட்டி அல்லது வெட்டி வேதினை எனப்படும் வரிஇனம் சோழர் வருவாய்த்துறையில் மற்றுமொரு முக்கிய வரி இனமாகும் .பொதுவாக எவ்வித ஊதியமும் பெற்றுக் கொள்ளாமல் அரசுக்கு அல்லது ஊருக்குச் செய்யப்படும் ஊழியமே வெட்டி எனப்படுவதாகும். இதை வரிஇனமாக எடுத்துக் கொண்டனர் எவ்வித செலவுமின்றி நாட்டின் தொழில் தேவைகள் மராமத்து பணிகள் பூரத்தியடைந்து விடுவதை இதிலிருந்து காண முடிகிறது.

மன்னர்கள் மட்டுமன்றி மக்கள் இயக்கமாகவும் நீ நிலைப்பாதுகாப்பு சோழர் காலத்தில் நடைபெற்றுள்ளது. கல்லணை இன்றும் உலகத்தின் அதிசயமாகச் செயல்பட்டு வருகின்றது. எந்த வித நவீன இயந்திர தொழில் நுட்பமும் இன்றி சோழர்கள் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு உள்ளது அவர்களின் தொழில் நுட்ப அறிவினைக் காட்டும்.

சோழர்களின் கோயில் அமைப்புக்கள், கோட்டை அமைப்புக்கள், நீர் நிலை அமைப்புகளை எல்லாம் பண்டையத் தமிழரின் பண்பட்ட நாகரிகத்தினைப் பறைசாற்றி நிற்பவை ஆகும். இராஜராஜ சோழன் பொன்னியின் செல்வன் மட்டுமல்ல தமிழ் இனமே பொன்னின் செல்வமாக இன்று வரைத் திகழ்வதற்கு சோழர்களின் நீர் மேலாண்மையும், வேளாண் மேலாண்மையும், முக்கிய காரணமாகும். நாட்டினை விரிவுபடுத்துதல் மட்டுமல்ல நாட்டின் இயற்கையைப் போற்றுதலும் பாதுகாத்தலும் மிக முக்கியமானதாகும். அதனால் தான் காவிரித் தாய்க்கு ஆடிப்பெருக்கு விழாவினைத் தமிழர்கள் மேற்கொண்டனர்.

நீர் நமது தாயாகும், உயிராகும், தாயைக் கழித்தாலும் தண்ணியைக் கழிக்கக் கூடாது என்ற பழமொழியும் இதனையை உணர்த்தும். தண்ணீர் குடத்தில் பிறக்கும் நாம் தண்ணீரோடு கரைகின்றோம். இருந்தும் தண்ணீரைப் பேணிப் பாதுகாக்காது போனாதால் தான் இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுகின்றன.

சென்னை மழையும், நெல்லை மழையும் கொல்லும் சேதிகள் ஏரா ளம். பண்டைத்தமிழன் நிலப்பாகுபாடு இயற்கை அடிப்படையில் ஏற்பட்டதாகும் சமூகச் சூழ்நிலை சார்பு மண்டலத்திற்கு ஏற்ப அனைத்து உயிரிவாழ்வியலும் அமைத்திருக்கின்றன இதில் மாற்றங்கள் ஏற்படும் போது பேரிடர்கள் ஏற்படுவது உறுதி என்பதையே தற்போதைய இயற்கை நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

காவிரி போற்றுதும் ,காவிரி போற்றுதும் என்ற இளங்கோவடிகளின் போற்றுதல் அனைத்து இதயங்களின் போற்றுதலாகவும் இருக்க வேண்டும். இயல்பிற்கு மாறான நீரியல் வழித்தடங்களைச் சோழர்கள் ஏற்படுத்தினாலும் அவையும் இயற்கையைப் பாதுகாப்பனவாகவும் இயற்கையோடு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இணைத்தனவாகவும் இருந்தன. அகண்ட காவேரியை அனைவருக்குமான காவிரியாக மாற்றினார்கள்.
மண்ணைப் பொன்னாக்கும். பொன்னி நதியைப் போற்றிப் பாலுதலின் விளைவே பசிப்பிணி போக்கும் நெற்களஞ்சியமாகச் சோழ மண்டலம் இன்று வரை நிகழ்ந்து வருகிறது…

ஆற்றங்கரைகளே மனித நாகரீகத்தின் தொட்டில் என்பதையே சோழ மன்னர்களின் நீர் மேலாண்மையும், அவர்களின் வாழ்வியல் செழுமையும் எடுத்துரைக்கின்றன. சோழ மன்னர்களின் நீர் மேலாண்மைத் திறனை இன்னும் பின்பற்றினால் இயற்கை பேரிடர்கள் ஏற்படாது என்பதை இவ்வாய்வு உறுதி செய்கின்றது

**குறிப்புகள்:**

1.தி.வை சதாசிவபண்டாரத்தார். இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் ப.31

2 .SIIVOI III No205 Verse 53

3.Epi.Ind.Vol XXII 110.34 verse 17

4.BBC News/jkpo: 24/12/2023

5.மேலது

6.tamil.surangam.in

7.SII.Vol No 689

**துணை நூற்பட்டியல்;**

[1.] சதாசிவ பண்டாரத்தார் தில்லை தமிழ் இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் தொல்காப்பிய நூலகம் சென்னை முதற்பதிப்பு 196

[2.] SII VOL VII NO. 96

[3.] கல்வெட்டு காலாண்டிதழ் 157இதழ்-19

[4.] மேலது

**[5.] BBC News/jkpo, 24/11/каз**

**[6.] tamil sumangam.in**

**[7.] South Indian Inscription volumes**

[8.] கல்வெட்டு காலாண்பிதழ் இதழ் தொல்பொருள், ஆய்வுத்துறை வெளியீடு 16 தமிழ்நாடு அரசு